# ICAR KRISHI VIGYAN KENDRA

(Hosted by CREED)

Ariyalur District, Tamil Nadu

**News Paper Coverages – November 2025**

வானதிரையான் பட்டினம் கிராமத்தில்

## காளான் வளர்ப்பு பயிற்சி



▸ வானதிரையான்பட்டினம் கிராமத்தில் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது.

தா.பழூர், அக்.28: வானதிரையான் பட்டினம் கிராமத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் சோழமாதேவியில் உள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சென்னை மற்றும் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் 26 நாள் பயிற்சியாக காளான் வளர்ப்பு நடைபெற்றது. இந்த பயிற்சி வானதிரையன்பட்டினம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சி 27.10.2025 முதல் 29.11.2025 வரை நடைபெற உள்ளது. இதன் முதல் நாளான நேற்று வானத்திரையன் பட்டினம் கிராமத்தில் காளான் வளர்ப்பு பயிற்சியின் துவக்க விழா நடைபெற்றது.

இப்பயிற்சியின் துவக்கமாக மையத்தின் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா வரவேற்புரை ஆற்றினார். மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகு கண்ணன் இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் பற்றி கூறினார். மையத்தின் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். பிறகு மையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் அசோக்குமார் காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், காளானில் உள்ள பயன்கள், காளான் வளர்ப்பின் மூலம் தொழில் முனைவோர் ஆவதற்கான எடுத்துக்காட்டுகள் போன்றவற்றை விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் காளான் வளர்ப்பதற்கு கொட்டகை அமைப்பதற்கு ஏற்ற இடத் தேர்வு ஆகியவையும் செய்யப்பட்டது. பயிற்சியில் அரியலூர் மாவட்டத்தை சார்ந்த 25 இளைஞர்கள் மகளிர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சி இன்னும் 25 நாட்கள் நடைபெற உள்ளது.

தா.பழூர் அருகே

# வேளாண் அறிவியல் மையத்தில் தேசிய ஒற்றுமை தினம்



தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிக்கப்பட்டது.

தா.பழூர், நவ.1: அரியலூர் மாவட்டம் தா.பழூர் அருகே சோழமாதேவியில் அமைந்துள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் சர்தார் வல்லபாய் படேல் 150வது பிறந்த நாளை ஒட்டி தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் துவக்கமாக மையத்தின் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா வரவேற்புரை ஆற்றினார். இந்த மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகு கண்ணன் மையத்தின் செயல்பாடுகள் மற்றும் தேசிய ஒற்றுமை தினம் கொண்டாடுவதற்கான காரணம் மற்றும் சர்தார் வல்லபாய் படேலின் வரலாறு ஆகியவற்றை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டு வேளாண் அறிவியல் மைய பண்ணையின் செயல் விளக்க திடல்கள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைய திடல்கள் அனைத்தும் கண்டுணர்வு சுற்றுலாவாக காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், மகளிர் பள்ளி மாணவ, மாணவிகள் என 78 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். நிறைவாக உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் திருமலைவாசன் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

பழங்குடியின பெருமை தினத்தில்

# பழங்குடியின தொழில் முனைவோருக்கு பயிற்சி



வானதிரையன் பட்டினத்தில் பழங்குடியினர் பெருமை தினத்தை முன்னிட்டு தொழில் முனைவோருக்கு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

தா.பழூர், நவ. 6: அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் ஜன் ஜாதியா கௌரவ் திவாஸ் எனும் பழங்குடியினப் பெருமை தினத்தையொட்டி, பழங்குடியின மக்களுக்கு தொழில் முனைவோருக்கான பயிற்சி வகுப்பு கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனை முன்னிட்டு 1.11.2025 முதல் 15.11.2025 வரை இந்த பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியானது 1.11.2025 முதல் 5.11.2025 வரை இருகையூர், காக்காபாளையம், துளாரங்குறிச்சி மற்றும் வானதிரையன்பட்டினம் ஆகிய கிராமங்களில் நடந்தது. இந்நிகழ்ச்சியில், புகழ்பெற்ற பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாள் குறித்தும் அவர் பழங்குடியின சமூகத்தின் மேம்பாட்டிற்காக போராடியவை குறித்தும் பழங்குடியினத்தினரிடம் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் அழகு கண்ணன் எடுத்துக் கூறினார். மேலும், தொழில்முனைவோருக்கான வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சிகளை மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா, ராஜா ஜோஸ்லின், அசோக்குமார், திருமலைவாசன், ஷோபனா மற்றும் சரண்யா ஆகியோர் மூலம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி நவம்பர் 15 தேதி வரை அரியலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் நடத்தப்பட உள்ளது. இது வரை 100க்கும் மேற்பட்ட பழங்குடியினர் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.